www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

Sl. No. : 20909275

**VTNI**

பதிவு எண் | | | | | | | | |

# 2012

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும் தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் [B] என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

| ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET |
|---|

↑

SEAL

[Turn over

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

SPACE FOR ROUGH WORK

Prepp
Your Personal Exam Guide

1. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

(A) நட்டம், நாட்டம், நொடித்தல், நோட்டம்

(B) நாட்டம், நட்டம், நோட்டம், நொடித்தல்

(C) நொடித்தல், நோட்டம், நட்டம், நாட்டம்

(D) நோட்டம், நொடித்தல், நாட்டம், நட்டம்

2. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்
இதில் – ஒறு என்னும் வேர்ச்சொல் எந்த இலக்கணத்தோடு வந்துள்ளது?

(A) ஒறுத்தார் – வினைமுற்று

(B) ஒறுத்தார் – வினையாலணையும் பெயர்

(C) ஒறுத்தார் – வியங்கோள் வினைமுற்று

(D) ஒறுத்தார் – தொழிற்பெயர்

3. உவமைத் தொடர்கள் :

1. உடலும் உயிரும் போல
2. அச்சில் வார்த்தாற் போல
3. அணி வகுத்தாற் போல
4. வேம்பும் அரசும் போல

பின்வருவனவற்றுள் இத்தொடருக்குப் பொருத்தமானதைத் தேர்க :

(A) ஒரே பொருளுடையன

(B) 2, 3, 4 – ஒரே பொருளுடையன

(C) 1, 2, 3 மட்டும் ஒரே பொருளுடையன

(D) 1, 2, 4 மட்டும் ஒரே பொருளுடையன

4. படு – என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக :

(A) பட்ட

(B) பட்டு

(C) படுதல்

(D) பட்டவன்

5. நல் – என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக :

(A) நல்கு

(B) நல்கிய

(C) நல்குதல்

(D) நல்குவார்

www.prepp.in

6. கட்டளை வாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

(A) வினாப்பொருள் தரும் வாக்கியம்

(B) விழைவு, வேண்டல், வாழ்த்தல், வைதல் ஆகியவற்றுள் ஒன்றைத் தெரிவிக்கும் வாக்கியம்

(C) ஒரு செய்தியைத் தெரிவிக்கும் வாக்கியம்

(D) தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வருவது

7. வழூஉச் சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க :

(A) வத்தல் அருகே கோடாரி இருந்தது

(B) வற்றல் அருகே கோடரி இருந்தது

(C) வற்றல் அருகே கோடாரி இருந்தது

(D) வலதுபக்கம் சீயக்காய் இருக்கிறது

8. 'பேடிகை வாளாண்மை போலக் கெடும்' எது?

(A) அதிவேக முயற்சி

(B) முயற்சியின்மை

(C) முயற்சி

(D) அழியும்

9. பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) மதிமுகம் – முகமதி

(B) கனிவாய் – வாய்க்கனி

(C) முகப்பூ – பூமுகம்

(D) மலரடி – அடிமலர்

10. 'தம்பிரான் தோழர்' என அழைக்கப்பட்டவர்

(A) அப்பர்

(B) சுந்தரர்

(C) திருஞானசம்பந்தர்

(D) மாணிக்கவாசகர்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

11. பட்டியல் I–ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக.

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | செய்தித்தொடர் | 1. | உண்மைக்கு அழிவில்லை அல்லவா? |
| (b) | உணர்ச்சி வாக்கியம் | 2. | மாணவர் சிறந்த முறையில் தேர்வு எழுதினர் |
| (c) | கட்டளை வாக்கியம் | 3. | ஆஹா! என்னே அழகு! |
| (d) | வினா வாக்கியம் | 4. | அனைவரும் தாய்மொழியைப் போற்றுக |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

12. பின்வருவனவற்றில் எது தி. ஜானகிராமனால் எழுதப்படாத புதினம்?

(A) செம்பருத்தி
(B) மரப்பசு
(C) அன்பே ஆரமுதே
(D) பாலும் பாவையும்

13. சரியான மரபுத் தொடர்களை தேர்வு செய்க :

(A) ஆந்தை கத்த கழுதை அலற கிளி கரைந்தது
(B) ஆந்தை அலற கழுதை கனைக்க கிளி கொஞ்சியது
(C) குதிரை கனைக்க குயில் கூவ சிங்கம் முழங்கியது
(D) புலி உறும மயில் அகவ யானை கத்தியது

14. "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

– இக்குறளின் அடிப்படையில் சீர் இயைபினைச் சுட்டுக

(A) யாதானும் – நாடாமால்
(B) நாடாமால் – ஊராமால்
(C) ஊராமால் – என்னொருவன்
(D) யாதானும் – சாந்துணையும்

15. Gripe – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக :

(A) சண்டையிடு
(B) துன்புறுத்து
(C) பயமுறுத்துகிற
(D) பயங்கரமான

16. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) விழி
(B) பழி
(C) ஒழி
(D) ஆழி

17. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியங்களைத் தேர்வு செய்க :

1. மேஸ்திரியிடம் அலமாரி ஜன்னல் சாவி
2. தலைமைத் தொழிலனிடம் நெடும்பேழை பலகணி திறவுகோல்
3. பஜார் மைதானத்தில் ஜமக்காளம்
4. கடைத்தெரு திறந்தவெளித் திடலில் விரிப்பு

(A) 1 மற்றும் 3
(B) 2 மற்றும் 3
(C) 2 மற்றும் 4
(D) 1 மற்றும் 4

18. வழூஉச் சொற்களற்ற வாக்கியங்களைத் தேர்வு செய்க :

1. அருவாமணையின் அருகில் அண்ணாக்கயிறு இருந்தது.
2. அவரைக்காய் மற்றும் சிகைக்காய் வாங்கினேன்.
3. தாழ்வாரத்தில் துடைப்பம் இருந்தது.
4. நஞ்சை நிலத்தில் வேர்வை சிந்தி உழைத்தான்.

(A) 1 மற்றும் 2
(B) 2 மற்றும் 3
(C) 3 மற்றும் 4
(D) 1 மற்றும் 4

19. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

(A) மடங்கல், முடங்கல், மொட்டு, மோனை
(B) முடங்கல், மடங்கல், மோனை, மொட்டு
(C) மொட்டு, மோனை, மடங்கல், முடங்கல்
(D) மோனை, மொட்டு, முடங்கல், மடங்கல்

20. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

(A) முடவன், மீனவர், மாடு, மடம்
(B) மாடு, மீனவர், முடவன், மடம்
(C) மீனவர், மாடு, மடம், முடவன்
(D) மடம், மாடு, மீனவர், முடவன்

www.prepp.in

Prepp Your Personal Exams Guide

21. இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக :
'வினையாலணையும் பெயர்'

(A) உடையான்

(B) ஈந்தார்

(C) உற்றார்

(D) வையார்

22. சரியான மரபுத் தொடரைத் தேர்க :

(A) சவுக்குத் தோப்பு அருகே ஆலங்காடு இருக்கிறது

(B) சவுக்குத் தோட்டம் அருகே ஆலந்தோப்பு இருக்கிறது

(C) பனந்தோப்பு அருகே பலாக்காடு இருக்கிறது

(D) பனந்தோட்டம் அருகே பலாத்தோப்பு இருக்கிறது

23. வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : (எ.கா.) அரசன் புலவரைக் கண்டான்; அவரை வரவேற்றான்; பரிசு வழங்கினான்

காரணம் (R) : தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும். ஓர் எழுவாய், பலபயனிலைகளைப் பெற்றுவரும் இதுவே தொடர் வாக்கியம்.

இவற்றுள் எது சரி?

(A) (A) தவறு, ஆனால் (R) சரி

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

(C) (A) சரி, ஆனால் (R) தவறு

(D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு. மேலும் (R) என்பது (A) விற்கு தவறான விளக்கம்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

24. பொருத்துக :

(a) Rinse — 1. சிற்றலை

(b) Riot — 2. பட்டை

(c) Rind — 3. கழுவு

(d) Rimple — 4. கலகம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

25. "பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாஆம் இல்லிறப்பான் கண்"

– இக்குறளின் முதலடியில் அமைந்துள்ள மோனை

(A) இணை மோனை

(B) பொழிப்பு மோனை

(C) கூழை மோனை

(D) மேற்கதுவாய் மோனை

26. வழூஉச் சொற்களற்ற வாக்கியங்களைத் தேர்வு செய்க :

1. சிலவுக்குப் பாவக்காய் விற்றான்
2. செலவுக்குப் பாகற்காய் விற்றான்
3. நஞ்சை நிலத்தில் வேர்வை சிந்த முயற்சித்தார்
4. நன்செய் நிலத்தில் வியர்வை சிந்த முயன்றார்

(A) 1 மற்றும் 2

(B) 2 மற்றும் 4

(C) 2 மற்றும் 3

(D) 3 மற்றும் 4

Prepp
Your Personal Exams Guide

27. பின்வரும் பாடலின் ஆசிரியரைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழன் என்றோர் இனமுண்டு<br>தனியே அவற்கொரு குணமுண்டு | 1. | கவிமணி |
| (b) | முப்பது கோடி முகமுடையாள் உயிர்<br>மொய்ம்புற ஒன்றுடையாள் | 2. | நாமக்கல் கவிஞர் |
| (c) | எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்<br>இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே | 3. | பாரதியார் |
| (d) | மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல<br>மாதவம் செய்திட வேண்டுமம்மா | 4. | பாரதிதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

28. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

(A) வாணிதாசன் – கொடிமுல்லை

(B) கண்ணதாசன் – எழிலோவியம்

(C) சுத்தானந்த பாரதியார் – தைப்பாவை

(D) முடியரசன் – பாரதசக்தி மகாகாவியம்

29. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

(A) அது, அஃது, ஐந்து, எதுகை

(B) அஃது, அது, எதுகை, ஐந்து

(C) அஃது, எதுகை, அது, ஐந்து

(D) எதுகை, அஃது, ஐந்து, அது

30. பிரித்தெழுதுக : கழற்கன்பு

(A) கழல் + அன்பு

(B) கழற்கு + அன்பு

(C) கழள் + அன்பு

(D) கழன் + அன்பு

31. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | அலரி | | அலறி |
|---|---|---|---|
| (A) | விரிந்து | – | கூவி |
| (B) | பூ | – | கூச்சம் |
| (C) | ஒருவகைச் செடி | – | பயந்து கூச்சலிட்டு |
| (D) | பயம் | – | கூச்சல் |

32. எவ்வகை வாக்கியம்?

'நான் நாளை மதுரை செல்வேன்' என்று நம்பமாறன் கூறினான். குடியரசு தலைவர் சென்னைக்கு வருகைத் தந்தார். அனைவரும் தாய்மொழியைப் போற்றுக.

(A) அயற்கூற்று வாக்கியம், வினா வாக்கியம், செய்தி வாக்கியம்

(B) நேர்கூற்று வாக்கியம், உடன்பாட்டு வாக்கியம், செய்தி வாக்கியம்

(C) நேர்கூற்று வாக்கியம், செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம்

(D) கட்டளை வாக்கியம், செய்தி வாக்கியம், அயற்கூற்று வாக்கியம்

33. எது செய்தி வாக்கியம் இல்லை?

(A) மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினர்

(B) குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தார்

(C) மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வருக

(D) திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர்

34. உணர்ச்சி வாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

(A) மகிழ்ச்சி, துன்பம், வியப்பு போன்ற உள்ளத்து உணர்வுகள் வெளிப்படுமாறு அமைவது

(B) ஒரு செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம்

(C) வினாப்பொருள் தரும் வாக்கியம்

(D) தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வருவது

35. தன் வினை வாக்கியத்தைக் கண்டறிக :

(A) பரிதிமாற் கலைஞர் வடமொழியும், தமிழும் பயின்றார்

(B) பரிதிமாற் கலைஞர் வடமொழியும், தமிழும் பயிற்றுவித்தார்

(C) பரிதிமாற் கலைஞர் வடமொழியும், தமிழும் பயிலார்

(D) பரிதிமாற் கலைஞரால் வடமொழியும், தமிழும் பயிற்றுவிக்கப்பட்டது

36. மாமேதை என இந்திய சட்டத்துறையில் அழைக்கப்பெற்றவர்

(A) காந்தியடிகள்

(B) நேரு

(C) அம்பேத்கார்

(D) இராஜாஜி

37. வேதனையில் சிக்குதல்

(A) கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது போல

(B) இஞ்சி தின்ற குரங்கு போல

(C) ஆப்பசைத்த குரங்கு போல

(D) உடும்புப் பிடி போல

38. வினா வாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

(A) வினாப்பொருள் தரும் வாக்கியம்

(B) ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடியும்

(C) ஒரு செய்தியைத் தெளிவாக தெரிவிக்கும் வாக்கியம்

(D) ஒன்றுக்கு மேற்பட்ட துணை வாக்கியங்களுடன் சேர்ந்து வரும்

www.prepp.in

Your Personal Exams Guide

39. பொருத்துக :

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | பார்த்திபன் கனவு | 1. | சுரதா |
| (b) | தமிழ்ச்சோலை | 2. | வைரமுத்து |
| (c) | தேன்மழை | 3. | கல்கி |
| (d) | கள்ளிக்காட்டு இதிகாசம் | 4. | திரு.வி.க. |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

40. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | முதல் மூன்று தேவாரத் திருமுறைகள் | 1. | திருநாவுக்கரசர் |
| (b) | 4, 5, 6 –ஆம் திருமுறைகள் | 2. | ஆண்டாள் |
| (c) | ஏழாம் திருமுறை | 3. | திருஞான சம்பந்தர் |
| (d) | திருப்பாவை | 4. | சுந்தரர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

41. சரியான மரபுத் தொடரைத் தேர்வு செய்க :

1. கற்குவியல் அருகே சாவிக் கொத்து கிடந்தது
2. கற்கூட்டம் அருகே சாவிக்குவியல் கிடந்தது
3. வேலங்காடு அருகே மாட்டு மந்தையைப் பார்த்தேன்
4. வேலங்காடு அருகே மாட்டுக் கூட்டத்தைப் பார்த்தேன்

(A) 1 மற்றும் 3  (B) 1 மற்றும் 4
(C) 2 மற்றும் 4  (D) 1 மற்றும் 2

42. பொருத்துக :

(a) கபிலரால் குறிஞ்சிப்பாட்டு இயற்றப்பட்டது  1. உணர்ச்சி வாக்கியம்
(b) குறிஞ்சிப்பாட்டைக் கபிலர் எழுதினார்  2. வினா வாக்கியம்
(c) என்னே! குறிஞ்சிப்பாட்டின் சுவை!  3. செயப்பாட்டு வினை
(d) குறிஞ்சிப்பாட்டைக் கபிலர் எழுதினாரா?  4. செய் வினை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

43. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை தேர்க.

| | தலை | | தளை |
|---|---|---|---|
| (A) | முகம் | – | முதல் |
| (B) | உறுப்பு | – | கட்டு |
| (C) | முடி | – | சேர்த்தல் |
| (D) | காதுகள் | – | ஒருமை |

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

44. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க :

(A) அங்கத்தினர் கவனம் ஆராதனையில் இல்லை

(B) உறுப்பினர் கவனம் வழிபாட்டில் இல்லை

(C) கிராமத்தில் அபூர்வமான விரதம் இருந்தான்

(D) சிற்றூரில் புதுமையான நோன்பு இருந்தான்

45. கொடுக்கப்பட்டுள்ள குறட்பாவில் அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்புகள் தேர்க :

அருமை உடைத்தென்(று) அசாவாமை <u>வேண்டும்</u>

பெருமை <u>முயற்சி</u> தரும்.

(A) முற்றும்மை, பலர்பால் வினைமுற்று

(B) வியங்கோள் வினைமுற்று, தொழிற்பெயர்

(C) முற்றும்மை, குறிப்பு வினைமுற்று

(D) சிறப்பும்மை, வியங்கோள் வினைமுற்று

46. எது தனிவாக்கியம் இல்லை?

(A) திரு.வி.க. பெண்களைப் போற்றினார்

(B) கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகியோர் இயற்கையைப் போற்றினர்

(C) முருகன், கந்தன், வேலன் ஆகியோர் மதுரைக்கு சென்றனர்

(D) அரசன் புலவரைக் கண்டான். அவரை வரவேற்றான். பரிசு வழங்கினான்.

47. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்றல் அரிது

– பின்வரும் இலக்கணக் குறிப்பில் எது இக்குறளுக்குப் பொருந்தியுள்ளது?

(A) எண்ணும்மை

(B) சொல்லிசை அளபெடை

(C) முற்றும்மை

(D) உம்மைத்தொகை

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

48. எது எதிர்ச்சொல்?

"குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்கச் செயல்"

(A) மிகை × மிக்க  (B) குற்றம் × நாடி

(C) குணம் × குற்றம்  (D) மிக்க × செயல்

49. 'ஒருமை–பன்மை' – பிழைகளற்ற வாக்கியங்களைக் கண்டறிக :

1. என் எழுதுகோல் இதுவல்ல
2. என் எழுதுகோல் இதுவன்று
3. உடைகள் கிழிந்துவிட்டது
4. உடைகள் கிழிந்துவிட்டன

(A) 1 மற்றும் 3  (B) 2 மற்றும் 4

(C) 3 மற்றும் 4  (D) 1 மற்றும் 4

50. கீழ்க்கண்டவற்றுள் தொடர் வாக்கியம் குறித்து சரியானது எது?

(A) தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும் ஓர் எழுவாய், பலபயனிலைகளைப் பெற்று வரும்

(B) மகிழ்ச்சி, துன்பம், வியப்பு போன்ற உள்ளத்து உணர்வுகள் வெளிப்படுமாறு அமைவது

(C) வினாப் பொருள் தரும் வாக்கியம்

(D) ஒரு செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம்

51. பின்வருவனவற்றில் எது நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நூல் அன்று?

(A) சந்தனப் பேழை  (B) சங்கொலி

(C) அவனும் அவளும்  (D) தமிழன் இதயம்

Prepp
Your Personal Exams Guide

52. "மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்

கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்"

– மேற்காண் பாடலில் அமைந்துள்ள தொடைகளின் அடிப்படையில் எது சரியான கூற்று?

(A) அடி எதுகை வந்துள்ளது

(B) சீர் எதுகை வந்துள்ளது

(C) அடியெதுகையும் அடிஇயைபும் வந்துள்ளன

(D) சீர்மோனை மட்டும் வந்துள்ளது

53. Diligence – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கீழ்காணும் விடைகளில் எது தவறானது?

(A) உழைப்பு

(B) சிரத்தை

(C) ஊக்கம்

(D) அக்கறை

54. பொருந்தா இணையைக் கண்டறிக :

| | | | |
|---|---|---|---|
| (A) | தண் | – | குளிர் |
| (B) | கார் | – | கருமை |
| (C) | மறு | – | குற்றம் |
| (D) | வீறு | – | விளக்கு |

55. பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) Illusion – மெய் தோற்றம்

(B) Illumine – வெளிச்சமாக்கு

(C) Ill–will – கெட்ட எண்ணம்

(D) Image – பிரதிமை

56. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல் :

மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வருக – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

(A) கட்டளை வாக்கியம்

(B) உடன்பாட்டு வாக்கியம்

(C) உணர்ச்சி வாக்கியம்

(D) செய்தி வாக்கியம்

57. செயப்பாட்டு வினைச் சொற்றொடரைக் கண்டறிக :

(A) நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தனர்

(B) நாட்டுப்பற்று நாடகக் கலைஞர்களால் வளர்க்கப்பட்டது

(C) வளர்த்தனர் நாட்டுப்பற்றை நாடகக் கலைஞர்கள்

(D) நாட்டுப்பற்றை நாடகக் கலைஞர் வளர்ப்பார்

58. பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) கொண்டல் – கிழக்கினின்றும் வீசும்

(B) தென்றல் – தெற்கினின்றும் வீசும்

(C) புயல் – மேற்கிலிருந்து வீசும்

(D) வாடை – வடக்கினின்றும் வீசும்

www.prepp.in

59. வரிசைப்படுத்துக :

(A) மிளகு, சுக்கு, திப்பிலி, திரிகடுகம்

(B) திப்பிலி, மிளகு, சுக்கு, திரிகடுகம்

(C) திரிகடுகம், சுக்கு, மிளகு, திப்பிலி

(D) திப்பிலி, சுக்கு, மிளகு, திரிகடுகம்

60. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல். கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(A) பொழுது சேவல் விழித்தான் கண் கூவி விடிந்தது

(B) பொழுது சேவல் கூவி விடிந்து கண் விழித்தான்

(C) சேவல் கூவி பொழுது விடிந்து விழித்தான் கண்

(D) சேவல் கூவி பொழுது விடிந்து கண் விழித்தான்

61. ஒருமை பன்மை பிழையற்ற வாக்கியத்தைக் கண்டறிக :

(A) புலி வந்தன எருதுகள் ஓடியது

(B) அதுகள் இங்கே உள்ளது

(C) மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கியது

(D) தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றன

62. 'நல்லதாய் தந்தைஏவ நானிது

செய்யபெற் றேனென்று'

– இப்பாடல் வரியில் உம்மைத் தொகை இடம்பெற்றுள்ள சொற்றொடர் எது?

(A) நானிது

(B) பெற்றேனென்று

(C) தந்தைஏவ

(D) நல்ல தாய் தந்தை

Prepp
Your Personal Exams Guide

63. பெயர்ச்சொல்லின் வகையறிக : "வாழ்க்கை"

(A) பண்புப்பெயர்
(B) காலப்பெயர்
(C) இடப்பெயர்
(D) தொழிற்பெயர்

64. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மக்கள் பெரியாரைப் போற்றுகின்றனர் | 1. | செய்தி வாக்கியம் |
| (b) | பெரியார் மக்களால் போற்றப்படுகின்றார் | 2. | உணர்ச்சி வாக்கியம் |
| (c) | என்னே! பெரியாரின் பொதுநலத் தொண்டு | 3. | செய்வினை |
| (d) | பெரியாரை அனைத்து மக்களும் போற்றுவர் | 4. | செயப்பாட்டு வினை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

65. "ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது"

– இக்குறளில் அடி எதுகை எது?

(A) ஒன்றாமை – ஒன்றியார்
(B) கண்படின் – எஞ்ஞான்றும்
(C) பொன்றாமை – ஒன்றல்
(D) ஒன்றாமை – பொன்றாமை

66. "சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்"

– இக்குறளில் இணைமோனையாக அமைவது எது?

(A) சுற்றத்தால் – சுற்ற
(B) பெற்றத்தால் – பெற்ற
(C) பெற்ற – பயன்
(D) சுற்ற – செல்வந்தான்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

67. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக : 'உருவகம்'

(A) நூற்கடல்
(B) நாண்வேலி
(C) மரப்பாவை
(D) கற்பகக் கனி

68. பெயர்ச்சொல்லின் வகை எதுவென அறிக : "இவள்"

(A) குடிப்பெயர்
(B) கிளைப்பெயர்
(C) காலப்பெயர்
(D) சுட்டுப்பெயர்

69. "தாமரை" பெயர்ச்சொல்லின் வகை அறிக.

(A) சினைப்பெயர்
(B) குணப்பெயர்
(C) காலப்பெயர்
(D) பொருட்பெயர்

70. பண்புப்பெயர்ச்சொல்லினை பொருத்துக :

(a) செம்மை — 1. சுவைப்பண்பு
(b) கூம்பு — 2. நிறப்பண்பு
(c) கிலோமீட்டர் — 3. வடிவப்பண்பு
(d) காரம் — 4. அளவுப்பண்பு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |



Prepp Your Personal Exam Guide

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

71. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல். கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(A) துலங்கிடும் குளிர்ந்த பார்வை துரும்பென மெலிந்த தேகம்

(B) குளிர்ந்த பார்வை துலங்கிடும் துரும்பென மெலிந்த தேகம்

(C) துரும்பென மெலிந்த தேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை

(D) துரும்பென துலங்கிடும் தேகம் மெலிந்த குளிர்ந்த பார்வை

72. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல். கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(A) புலப்படுத்தியுள்ளார் நுட்பமான இசையின் இலக்கணத்தை

(B) இசையின் புலப்படுத்தியுள்ளார் இலக்கணத்தை நுட்பமான

(C) இசையின் நுட்பமான இலக்கணத்தைப் புலப்படுத்தியுள்ளார்

(D) நுட்பமான இசையின் புலப்படுத்தி உள்ளார் இலக்கணத்தை

73. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல். கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

(A) கல்வியில் புதுப்புதுத் துறைகள் நாள்தோறும் உருவாகிக் கொண்டே வருகின்றன

(B) நாள்தோறும் கல்வியில் புதுப்புதுத் துறைகள் உருவாகிக் கொண்டே வருகின்றன

(C) நாள்தோறும் புதுப்புதுத் துறைகள் கல்வியில் உருவாகிக் கொண்டே வருகின்றன

(D) புதுப்புதுத் துறைகள் நாள்தோறும் கல்வியில் உருவாகிக் கொண்டே வருகின்றன

74. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக :

'ஒரு பொருட் பன்மொழி'

(A) காத்தோம்பல்

(B) வளர்சோலை

(C) ஒரு தனி

(D) இளஞ்சிறுமகன்



Prepp Your Personal Exam Guide

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

75. பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) மனப்பால் குடித்தல் – கற்பனை செய்தல்

(B) மதில்மேல் பூனை – நிச்சயம் இல்லாமை

(C) தாளம் போடுகிறான் – இன்பப்படுகிறான்

(D) கங்கு கரையில்லை – எல்லையில்லை

76. பொருந்தா இணையைக் கண்டறிக :

(A) புந்தி – பூங்கா

(B) கான் – அடவி

(C) படிறு – வஞ்சம்

(D) வேணி – சடை

77. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

"கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்"

(A) கூடல் நகரம் எங்குள்ளது?

(B) கூடல் மாநகரின் சிறப்பு என்ன?

(C) தமிழினால் ஏற்பட்டுள்ள பயனைக் கூறு.

(D) தமிழாய்வு எங்கு நடைபெற்றது?

78. பிரித்தெழுதுக :

பிணிநோயுற்றோர்

(A) பிணிநோய் + உற்றோர்

(B) பிணி + நோய் + உற்றோர்

(C) பிணி + நோயுற்று + ஓர்

(D) பிணி + நோயுற்றோர்

Prepp
Your Personal Exams Guide

79. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) பூண், பாண், ஞாண், ஊண்
(B) பாண், பூண், ஊண், ஞாண்
(C) ஊண், ஞாண், பாண், பூண்
(D) ஞாண், ஊண், பூண், பாண்

80. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் :

(A) பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
(B) பாடறிந்து ஒழுகுதல் எனப்படுவது பண்பு
(C) ஒழுகுதல் எனப்படுவது பாடறிந்த பண்பு
(D) பாடறிந்து பண்பு எனப்படுவது ஒழுகுதல்

81. எது கலவை வாக்கியம் இல்லை?

(A) யார் கல்விச் செல்வம் பெறுகிறார்களோ அவர்கள் வாழ்வில் வளம் பெறுவர்
(B) பவானி அயராது படித்ததால் வாழ்க்கையில் வளம் பலபெற்று வெற்றிவாகைச் சூடினாள்
(C) காயத்ரி லஷ்மி அறிவியல் புத்தகங்களைப் படித்ததால் விஞ்ஞானியாகத் திகழ்கிறாள்
(D) முதல்வர் டில்லிக்குச் செல்கிறார்

82. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | தனிவாக்கியம் | 1. | யார் கல்விச்செல்வம் பெறுகிறார்களோ அவர்கள் வாழ்வு வளம் பெறும் |
| (b) | வினா வாக்கியம் | 2. | பாலு கந்தனை வணங்கினான் |
| (c) | கட்டளை வாக்கியம் | 3. | குழந்தைக்கு என்ன தெரியும்? |
| (d) | கலவை வாக்கியம் | 4. | எழுந்து நில்! |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

83. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக : 'பெயரெச்சம்'

(A) ஆன்ற (B) புரிந்த

(C) புக்கு (D) நீங்கிய

84. இலக்கணக் குறிப்புச் சொல்லைத் தேர்க : 'உம்மைத் தொகை'

(A) குணம்குறி (B) முழங்கு முரசு

(C) பொருபுலி (D) நாநலம்

85. ஒருமை–பன்மை பிழைகளற்ற வாக்கியங்களைக் கண்டறிக :

1. ஒவ்வொரு ஊர்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது

2. தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் தொன்மையானது

3. ஒவ்வோர் ஊரிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது

4. தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் தொன்மையானது

(A) 1 மற்றும் 4 (B) 2 மற்றும் 4

(C) 3 மற்றும் 4 (D) 1 மற்றும் 3

86. சந்திப் பிழை இல்லாத தொடரைத் தேர்க :

(A) அன்பெனப் படுவது தன்கிளைச் செறாமை

(B) அன்பென படுவது தன்கிளை செறாமை

(C) பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

(D) பொறையென படுவது போற்றாரைப் பொறுத்தல்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

87. இயல் – என்னும் வேர்ச்சொல்லின் வினை எச்சத்தை தேர்ந்தெடுக :

(A) இயன்ற
(B) இயல்க
(C) இயன்று
(D) இயலல்

88. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

(A) ஆள்வினை இன்மை எது?
(B) ஆள்வினை பொருள் தருக.
(C) ஆள்வினையால் வரும் பெருமை எது?
(D) ஆள்வினை இன்மையால் என்ன நேரும்?

89. 'உயிரளபெடையின்' வகைகள் – எத்தனை?

(A) இரண்டு
(B) மூன்று
(C) நான்கு
(D) ஐந்து

90. பொருத்துக :

(a) Digest — 1. விரல் சம்பந்தமான
(b) Digestion — 2. சுருக்கம்
(c) Digit — 3. ஜீரணமாதல்
(d) Digital — 4. விரலிடை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

91. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

"தீங்குடை மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி"

(A) மொழியுணர்ச்சி எங்கு தென்படாது?
(B) தீங்குடை மனப்போக்கர் யார்?
(C) மனப்போக்கு யாருக்குச் சரியாக இருக்க வேண்டும்?
(D) மொழியுணர்ச்சியால் வரும் பயன் என்ன?

Prepp
Your Personal Exams Guide

92. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :

"நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்

நேர்உறக் கண்டுளந் துடித்தேன்"

(A) நீடிய பிணி எது?

(B) நேர் உறக் கண்டால் என்னவாகும்?

(C) நீடிய பிணி ஏன் வருகிறது?

(D) யாரைக் கண்டு உள்ளம் துடிக்கிறது?

93. சிறுகதை அமைப்புடன் முதலில் தோன்றிய சிறுகதை நூல் எது?

(A) மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்

(B) குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை

(C) பஞ்ச தந்திரக் கதைகள்

(D) அபிநவக் கதை

94. புரட்சித் துறவி என அழைக்கப்படுபவர்

(A) இளங்கோவடிகள்

(B) மணிமேகலை

(C) விவேகானந்தர்

(D) இராமலிங்கம்

95. 'பிஞ்சிலே பழுத்தது போல' – உவமைத் தொடருக்குப் பொருத்தமான பொருளை எழுதுக.

(A) திட்டமிடாமை

(B) அறிவு சிறப்புடன் சிறு வயதிலேயே இருத்தல்

(C) முதிர்ச்சியின்மை

(D) பிறர்மேல் ஆளுமை செலுத்தல்

www.prepp.in

96. எது தவறு?

(A) ஓட்டைச் சட்டியானாலும் இனிக்கும்

(B) பட்ட காலில் படும், கெட்ட குடியே கெடும்

(C) அன்பான நண்பனை ஆபத்தில் அறி

(D) மரணம் நாட்காட்டி பார்க்காது

97. கொடுக்கப்பட்டுள்ள குறட்பாவில் அடிக்கோடிட்டச் சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்புகள் தேர்க :
ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

(A) முற்றும்மை, ஒருபொருட்பன்மொழி, வினைத்தொகை

(B) பண்புத்தொகை, ஒருபொருட்பன்மொழி, பெயரெச்சம்

(C) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர், ஒருபொருட் பன்மொழி, தொழிற்பெயர்

(D) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர், வினைத்தொகை, தொழிற்பெயர்

98. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :
"குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே"

(A) குழவிக்கு என்ன வேண்டும்?
(B) குழவிக்கு இனிதாவது யாது?
(C) பிணியின்றி வாழ்தல் இனிதா?
(D) இனிமையான வாழ்வு எது?

99. "மடநடை மஞ்ஞை அகவ கடல்முகந்து" – இத்தொடரில் அமைந்துள்ள தொடைகளின்படி பின்வருவனவற்றுள் எது சரியான கூற்று?

(A) இத்தொடரில் சீர்மோனை வந்துள்ளது

(B) இத்தொடரில் சீர்யெதுகை வந்துள்ளது

(C) இத்தொடரில் சீர்மோனையும் சீர்எதுகையும் வந்துள்ளன

(D) இத்தொடரில் அடிமோனையும் அடிஎதுகையும் வந்துள்ளன

100. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :
"நீடுழி காக்கும்கை காராளர்கை"

(A) நீடுழி வாழ்பவர் யார்?
(B) காராளர்கையின் சிறப்பு என்ன?
(C) காராளர் என்ன செய்கின்றனர்?
(D) காராளர் காப்பது எப்படி?